# விவாகரத்து முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்: அனுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு

Ameer Rushana[1] & Ahamed Sarjoon Razick[2]

[1,2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
a.rushana94@gmail.com, sarjoonra@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் முதல் சமூக நிறுவனம் குடும்பம் என்ற வகையில் தனிமனிதன், குடும்பம் என்பதை திருமணத்தினூடாக ஏற்படுத்திக்கொள்கின்றான். திருமணம் எனும் அம்சம் ஆண்-பெண் எனும் இரு வேறுபட்ட தரப்பினர்களை ஒரு சமூகத்தின் முதன்மை அத்திவாரமாகிய குடும்பம் என்ற கட்டமைப்பினுள் ஒன்றிணைக்கின்றது. அரிதான சந்தர்ப்பங்களில் கணவன் மனைவிக்கிடையில் பிணக்குகள் எற்பட்டு மன முறிவுக்கு உள்ளாகி விவாகரத்துக் கோரும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் விவாகரத்துப் பெற்ற ஆண்களை விட அதிமான பெண்கள் அதன் பாதிப்புக்களை அனுபவிக்கின்றனர். இந்த வகையில் இப்பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகள் அவசியமாகின்றது. அனுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் விவாகரத்துப் பெறுவதற்கான காரணங்களையும், முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதனால் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பவற்றையும் கண்டறிவது இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாக உள்ளன. பண்பு ரீதியான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வு, குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்றவர்களுல் எழுமாறாக 50 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் பெறப்பட்ட நேர்காணலின் பகுப்பாய்வினையும் மேலும் ஆவணங்களின் மீளாய்வினையும் மையப்படுத்தி மேற்காணும் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன. பெண் விவாகரத்தின் அதிகரிப்புக்கு கணவன், மனைவி மத்தியில் எழும் சந்தேக மனப்பாங்கு மற்றும் பராமரிப்பின்மை முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. விவாகரத்துப் பெற்ற பெண்கள் தாபரிப்புப் பணத்தை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளாமை, தனிநபர் நடத்தையில் குளருபடிகள் ஏற்படல், சுயகொளரவம் இழக்கப்படல், பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படல், பாதுகாப்பு இழக்கப்படல், மன உளைச்சலுக்கு ஆளாகுதல், கலாசார, சமூக சீர்கேடுகள், தனிமனித பாதிப்புக்கள் மற்றும் அநாதரவாக்கப்படல் ஆகிய பாதிப்புக்களுக்கு மேற்படி விவாகரத்துப் பெற்ற பெண்கள் முகங்கொடுத்து வருகின்றனர். மேற்படி ஆய்வில் விவாகரத்துப்பெற்ற அதிகமான பெண்கள் தாபரிப்புப் பணம் உரிய நேரத்தில் கிடைக்காததால் கூடுதலான பாதிப்புகளை அனுபவிப்பதாக கண்டறியப்பட்டது. ஆகவே, இவ்வாய்வின் முடிவுகள் கொள்கை வகுப்பாளர்கள், சமூக ஆய்வாளர்கள், சமூக அமைப்புக்கள், குடும்ப ஆலோசனை வழிகாட்டல் அலுவலர்கள் போன்றோருக்கு தீர்மாணங்களை மேற்கொள்ளத் துணையாக அமைய முடியும்.

**திறவுச் சொற்கள்:** அனுராதபுர மாவட்டம், முஸ்லிம் பெண்கள், விவாகரத்து, குல்உ, தலாக், பாதிப்புக்கள்

## 1. ஆய்வுப் பின்னணி

அனுராதபுர மாவட்டமானது 7,179 சதுரகிலோமீற்றர் பரப்பெல்லையை கொண்டுள்ளது. இது ஏழு பாராளுமன்றத் தொகுதிகளையும் 694 கிராம சேவகர் பிரிவுகளையும், 22 பிரதேச செயலகப் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அனுராதபுர மாவட்டத்தில் மொத்தமாக 860,575 மக்கள் வாழ்கின்றனர். இங்கு பெரும்பான்மையாக பௌத்தர்களும் (90.9%), ஏனையோர் சிறுபான்மையினராக அதாவது இலங்கைத் தமிழர்கள் (1.0%), முஸ்லிம்கள் (8.0%) மற்றும் கிறிஸ்தவர்கள் (1.2%) வாழ்கின்றனர் (சனத்தொகைக் கணிப்பீடு-அனுராதபுர மாவட்டம், 2012).

அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அதிலே முஸ்லிம்கள் 70,692 மக்கள் வாழ்கின்றனர். (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் - 2012). அந்தவகையிலே அனுராதபுர மாவட்டத்தில் பல விவாகரத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. அதிலே அதிகமான பாதகங்களை விவாகரத்துப் பெற்ற

பெண்கள் அனுபவித்து வருகின்றனர். இஸ்லாமிய நோக்கில் குடும்பம் முக்கியத்துவமிக்க ஒன்றாகும். எனவே இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல் ஹதீஸ் என்பனவும் குடும்பக் கட்டமைப்பு, மேன்பாடு போன்றவற்றில் பெரிதும் கவனம் செலுத்துகின்றது. பெரும்பாலும், ஆண் பெண் ஆகிய இருவரின் ஒன்றிணைப்பின் மூலம் குடும்பம் தோற்றுவிக்கப்படுகின்றது. ஆகவே இவ்விருவரிடையே இடம்பெறும் குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்து குடும்பங்கள் சிதைவடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன (பௌசுல், 2015). இலங்கையில் குடும்பப் பிரச்சினைகள் காரணமாக நாளொன்றுக்கு 400 விவாகரத்துக்கள் இடம்பெறுவதாகவும், அதில் கனிசமானவை திருமணம் முடித்த ஆண்டிலேயே நிகழ்வதாகவும் சமூக சேவைகள் திணைக்களம் எச்சரித்துள்ளது (பௌசுல், 2015). முஸ்லிம்களிடத்தில் இப்பிரச்சினைகள் விவாகரத்தின் வீதத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. கடந்த 5 வருடங்களில் காழி நீதிமன்றங்களில் விவாகரத்துக் கோரி மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் இதற்கான சான்றாக உள்ளது. 2015 தொடக்கம் 2019 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் 848 விவாகரத்திற்கான விண்ணப்பங்கள் காழி நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்களையும், விவாகரத்துப் பெறும் பெண்கள் மீது விவாகரத்து ஏற்படுத்தும் தாக்கங்களையும் இவ்வாய்வு கண்டறிய முனைகிறது.

## 2. இஸ்லாத்தில் விவாகம், விவாகரத்து பற்றிய கோட்பாட்டு அடிப்படைகள்

இவ்வாய்வின் கோட்பாட்டு ரீதியான அம்சங்களை விளக்கும் வகையில் குடும்பம் பற்றிய அறிமுகம், திருமணம் என்பவற்றை தெளிவுபடுத்துவதோடு விவாகரத்து, அதன் வகைகள் தொடர்பான இஸ்லாத்தின் நிலை குறித்தும் ஆராய்வதாக உள்ளது.

### 2.1 குடும்பம்

குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது திருமண உறவாலோ, தத்தெடுத்தல் போன்றவற்றாலோ சட்டபூர்வமான முறையில் அமைந்த ஓர் உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனித உரிமை சாசனத்தின் 16(3) விதிப்படி "குடும்பம்" என்பது சமூகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான ஓர் அலகாகும் என்பதோடு அது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் மூலக்கூறு எனவும் அது மானிட சமூகத்தின் சிறிதாக்கப்பட்ட வடிவம் எனவும் கூறப்படுகின்றது (சுஹீரா ஸபீக், 2014 பப. 105-106).

இத்தகைய குடும்பத்திற்கு வரைவிலக்கணம் கூறும் Robert Bierstadt என்பவர் "மனிதன் சந்திக்கின்ற சமூக நிறுவனங்களில் முதன்மையானது குடும்பம்" என்கின்றார். (சுஹீரா ஸபீக், 2014 ப. 106) அதே போன்று குடும்பம் பற்றி கூறவந்த Mc Ivar பாலுணர்ச்சியால் நிலைத்து நிற்கக் கூடியதும், இனப் பெருக்கத்தின் மூலமாக குழந்தை வளர்க்கும் தன்மை வாய்ந்ததுமான குழுவே குடும்பம்" என்கின்றார் (ரிஸ்வான். எம், 2009 ப.24).

அதுமட்டுமன்றி, அல்குர்ஆன் பல இடங்களில் பலரது குடும்பங்களைப் பற்றி பேசியிருக்கிறது. பல நபிமார்களின் குடும்பங்களைப் பற்றி எடுத்தியம்பும் அல்குர்ஆன், குறிப்பாக நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தைப் பற்றி நிறையவே பேசியிருக்கிறது. அல்லாஹுத் தஆலா ஸூரதுத் தஹ்ரீமில் குடும்பம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துச்சொல்கிறான். ''ஈமான் கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும் கற்களுமேயாகும்'' (அல்குர்ஆன் 66: 6).

குடும்பம் ஒரு அரசாங்க முறையின் சுருங்கிய வடிவம் என்று சில சமய சித்தாந்தங்கள் கருதும் அளவுக்கு அதன் முக்கியத்துவம் விளங்குகின்றது. ஆனால் இத்தகைய குடும்பங்களின் இருப்பிடத்தை அழித்து பதிய சித்தாந்தங்கள், கோட்பாடுகளை இன்றைய மேற்குலகம் முன்வைத்துள்ளது. இதனால் இன்று பல குடும்பங்கள் சிதைவுற்று அலைகின்றன.

### 2.2 திருமணம்

இது ஒப்பந்தத்துடன் வாழ்விலே சங்கமிக்கும் ஓர் ஆணும் பெண்ணும் பரஸ்பரம் நேசித்து, இன்பங்களைப் பகிர்ந்து, துன்பங்களில் பங்கெடுத்து, துயரங்களில் தோள்கொடுத்து, ஓர் உயிர் ஈருடலாய் ஒருமித்து வாழ்வதே இனிய இல்வாழ்க்கையாகும். இரத்தபந்தமில்லா ஓர் அந்நியம், திருமண பந்தத்தின் மூலம் அந்நியோன்யமாகி, மற்றெல்லா உறவுகளையும், நட்புகளையும் விட நெருக்கமாகி, அந்தரங்க உணர்வுகள் வரை ஊடுருவி இரண்டறக் கலந்து விடும் கணவன்-மனைவி உறவுதான் சந்தோஷமான குடும்ப சூழ்நிலையின் அஸ்திவாரமாக உள்ளது. இதனாலேயே அல்குர்ஆன் ''நீங்கள் மனைவியரிடத்தில் அமைதி பெறுவதற்காக உங்களில் இருந்தே அவர்களைப் படைத்திருப்பதும், மேலும் அவன் உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் சிந்திக்கும் சமூகத்திற்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன'' (அல்குர்ஆன், 30:21).

இஸ்லாத்தில் திருமணமென்பதை நிறைவேற்றியவர் வாழ்வின் அரைப்பகுதியை பூர்த்தி செய்தவராவார். திருமணம் இறைவனால் ஆகுமாக்கப்பட்ட விடயமாக இருப்பினும் அது தொடர்பாக எழுகின்ற உரிமைகளையும், கடப்பாடுகளையும் பற்றிக் அல் குர்ஆன் மிக விரிவாக எடுத்தியம்புகின்ற போதிலும், இது முழுமையானதொரு சிவில் ஒப்பந்தமாகும். மனித குலத்தை மாசுபடுத்தலில் இருந்து பாதுகாக்கின்ற இபாதத் அல்லது பக்தி நிறைந்த செயற்பாட்டாக அது காணப்படுகின்றது (Arif Ali Khan, 2010).

மனித வாழ்வில் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளில் திருமணம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. மணவாழ்வு ஆன்மீகத்திற்கு எதிரானது என சில மதங்கள் கூறுவதை இஸ்லாம் ஏற்கவில்லை. மாறாக திருமணத்தை அதிகமதிகம் வலியுறுத்துகின்றது. ''உஸ்மான் பின் மழ்வூன் (ரழி) அவர்கள் நபியவர்களிடத்தில் துறவறம் மேற்கொள்ள அனுமதி கேட்ட போது நபியவர்கள் அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டார். அவருக்கு

நபியவர்கள் அனுமதி அளித்திருந்தால் நாங்கள் ஆண்மை நீக்கம் செய்திருப்போம் என ஸஃதிப்னு அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கிறார்கள்'' (நூல்கள்: புகாரி 5074, முஸ்லிம், 2488).

திருமணத்தின் நோக்கங்களை இஸ்லாம் வரையறை செய்கின்றது.அதில் முதலாவது சந்ததிகள் பெற்றெடுப்பதாகும். இது பற்றி அல்குர்ஆன் கூறும் போது ''மனிதர்களே உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள். அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள். உறவினர்கள் விசயத்திலும் அஞ்சுங்கள். அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாக இருக்கின்றான்'' (அல்குர்ஆன் 4:1).

### 2.3 விவாகரத்து

திருமணத்தை வரவேற்கின்ற இஸ்லாம் விவாகரத்து எனும் மணமுறிவை வெறுக்கின்றது. இஸ்லாம் தலாக்கை அனுமதித்த போதிலும் விருப்பத்துடன் அனுமதிக்கவில்லை. தேவையைப் பொறுத்து மாத்திரமே அது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. தேவையின்றி தலாக் சொல்வதே ஹலாலானவற்றுள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானதாகும். ''அனுமதிக்கப்பட்ட விடயங்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுக்கத்தக்கது தலாக் ஆகும்'' என நபியவர்கள் கூறினார்கள் (சுனன் அபூதாவூத்: 13.3).

ஒரு கணவன் மனைவியை விவாகரத்து செய்வதையே தலாக் என்று சொல்லப்படும். அதாவது இல்லற வாழ்வை தொடர்ந்து நடத்து முடியாது என்று உறுதியான பின்னர் வேறு வழியின்றி இறுதிக்கட்டத்தில் ஒரு கணவனால் இது மேற்கொள்ளப்படுகின்றது.

பெண்களை அனுபவிப்பதில் ஆசை கொண்டு அதிகமாக தலாக் சொல்பவர்களை அல்லாஹ் சபிக்கின்றான். ''பெண்களை நிர்வகிக்க ஆண்கள் தகுதியுடையோராவர். அவர்களில் சிலரை மற்றும் சிலரைவிட அல்லாஹ் சிறப்பித்திருப்பதாலும், (ஆண்களாகிய) அவர்கள் தமது செல்வங்களிலிருந்து செலவழிப்பதாலும் ஆகும். எனவே நல்லொழுக்கமுள்ள பெண்கள் கட்டுப்பட்டு நடப்போராகவும், (கணவனில்லாது) மறைவாக இருக்கும் சமயத்தில் அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருப்பர். எவர்கள் கணவருக்கு மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களோ, அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். (திருந்தாவிட்டால்) படுக்கைகளில் அவர்களை வெறுத்து விடுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களுக்கு இலேசாக அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட்டால் அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உயர்ந்தவனும், பெரியவனுமாக இருக்கின்றான்'' (அல்குர்ஆன், 4:34).

இவ்வாறு கணவனானவன் எடுத்த எடுப்பிலேயே தனது மனைவியை, அவளில் குறை கண்ட போதும் விவாகரத்து எனும் தலாக் சொல்லக் கூடாது என்பதற்காகவே இவ்வாறான வழிகாட்டலை இஸ்லாம் கூறியுள்ளது. அதன் அடிப்படையில், சொல்லித் திருத்துதல்,படுக்கையிலிருந்து விலக்கி வைத்தல்,அடித்துத் திருத்துதல்,நடுவர்கள் மூலமான தீர்ப்பு ஆகிய தீர்வுகளை முன்வைக்கின்றது.இவ்வாறான வழிமுறைகள் பயனளிக்காத போதும் கூட இஸ்லாம் விவாகரத்தின் மூலமான உடனடியான ஒரு பிரிவை கூறவில்லை.

மாறாக கணவன் தனது மனைவியை ஒரு முறை தலாக் கூறிய பின் அவளது இத்தா காலத்திற்குள் அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கான அனைத்து வழிமுறைகளுக்குமான ஏற்பாடுகளை செய்துள்ளது. அதாவது மனைவி தனது இரண்டு தலாக்குகளின் இத்தாவுடைய காலங்களை கணவனது இல்லத்தில் கழிக்குமாறு ஏவுகின்றது. ஏனெனில் கணவன்- மனைவி ஆகிய இருவருக்குமிடையில் பரஸ்பரம் என்பதை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இவைகள் பயனளிக்காத போது மட்டுமே விவாகரத்து என்ற நிலைக்கு வர முடியும்.

### 2.4 விவாகரத்தின் வகைகள்

இஸ்லாத்தின் விவாகரத்து முறைகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.இம்மூன்று முறைகளும் விவாகரத்து சட்டங்களின் மகத்துவத்தையே எடுத்துக் காட்டுகின்றன. அவை:

- பஸ்கு
- தலாக்
- குல்உ

#### 2.4.1 பஸ்கு

ஒரு நிகாஹ் நிறைவேறுவதற்கு பல்வேறு நிபந்தனைகள் காணப்படுகின்றன. அந்நிபந்தனைகள் பேணப்படாதவிடத்து திருமண ஒப்பந்தம் முறிந்து விடுவதனையே இது குறித்துக் காட்டுகின்றது. இஸ்லாமிய திருமணம் என்று ஷரீஆ அங்கீகரிக்காத ஒப்பந்தங்கள் அனைத்தும் இயல்பாகவே பஸ்கு ஆகிவிடும். தெளிவற்ற விடயங்கள் காழியின் தீர்ப்பின் பின்னர் முடிவெடுக்கப்படும். பின்வரும் காரணங்களில் பஸ்கு நடைபெறலாம்.

- அஜ்னபி அல்லாத மஹ்ரமி உறவில் திருமணம் நடந்திருத்தல். உதாரணமாக கணவனும், மனைவியும் பால்குடி சகோதரர்கள் என்ற விடயம் திருமணத்தின் பின்னர் தெளிவாதல்.
- பால்ய விவாகம் ஒன்றை தந்தை அல்லது பாட்டன் அல்லாதவர்கள் செய்து வைத்திருந்தால் அவ்விருவரும் வளர்ந்த பின்னர் அதனை பஸ்கு செய்து கொள்ள முடியும்.
- இருவரில் ஒருவர் தம் சமயத்தை துறத்தல்.
- முஸ்லிம் அல்லாத கணவன்-மனைவி இருவரில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்க அடுத்தவர் இஸ்லாத்தை ஏற்காது விடுதல். இஸ்லாத்தை ஏற்காத பெண் அஹ்லுல் கிதாபாக இருப்பின் பிரச்சினை இல்லை.

#### 2.4.2 தலாக்

தலாக் என்பது விடுவித்தல், கட்டவிழ்த்து விடல் என்பதை குறிக்கும். இது கணவனினால் பெறப்படும் விவாகரத்து முறையில், கணவனின் சாதாரண ஒரு அறிவிப்பின் மூலம் திருமணம் முடிவுக்கு கொண்டு வரப்படும். ஒரு கணவன் விவாக பந்தத்திலிருந்து தனது மனைவிக்கு விலக்களிப்பதனை அல்லது விடுதலை செய்வதனை இது குறித்துக் காட்டுகின்றது. உன்னை நான் தலாக் செய்து விட்டேன் என்று கூறினாலும் இது நிறைவேறி விடுகின்றது. தலாக் சொல்வதற்கு சாட்சிகள் எதுவும் வேண்டப்படாததனால் இத்தகைய

வார்த்தைப் பிரயோகங்களை ஒரு பரிகாசமாக எடுப்பது தவறாகும். ''ஆனால் அவர்கள் (தலாக்) விவாகவிலக்கு செய்து கொள்ள உறுதி கொண்டார்களேயானால் நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்''. (அல்குர்அன் 02:227) அவ்வாறு அறிவிப்புச் செய்வதற்கு கணவன், மனைவி மீது எந்தக் காரணத்தையும் காதி நீதிமன்றத்தில் வெளிப்படையாக கூற வேண்டிய அவசியமில்லை.

மேலும் திருமணமான கணவன்-மனைவி உடலுறவு கொள்ளாத நிலையில் அவள் கணவனால் தலாக் கூறப்பட்டால் அவளுக்குரிய கணக்கிடக் கூடிய இத்தாக் காலம் எதுவுமில்லை. ''ஈமான் கொண்டவர்களே! மு∴மினான பெண்களை நீங்கள் மணந்து பிறகு நீங்கள் அவர்களை தொடுவதற்கு முன்னரே 'தலாக்' செய்து விட்டீர்களேயானால் அவர்கள் விஷயத்தில் நீங்கள் கணக்கிடக் கூடிய (இத்தாத்) தவணை ஒன்றும் உங்களுக்கு இல்லை. ஆகவே அவர்களுக்குத் தக்கதாக ஏதேனும் கொடுத்து அழகான முறையில் அவர்களை விடுவித்து விடுங்கள்'' (அல்குர்ஆன் 33:49)

தலாக் அறிவிப்புச் செய்வதற்குப் பல முறைகள் உண்டு. அறிவிப்புச் செய்தல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இது மீளப்பெறக் கூடியதாகவோ அல்லது மீளப் பெறமுடியாததாகவோ அமையும். மீளப் பெறக் கூடிய தலாக் அறிவிப்பு முறையானது உடனடியாகத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வராது. அத்துடன் அது மீளப் பெற முடியாததாக மாறுவதற்குள் திறத்தவர்கள் மீண்டும் தமது திருமணத்தை (இல்வாழ்க்கையை) தொடரலாம். ஒருவர் தனது மனைவியை தலாக் சொல்வதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. தலாக் சொல்ல வேண்டும் என்றிருப்பவர் ஒரே ஒருமுறை சொல்வதுதான் பாதுகாப்பானது.

### 2.4.3 குல்உ

நியாயமான காரணங்களினால் ஒரு மனைவி தனது கணவனை விட்டுப் பிரிந்து கொள்வதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள சலுகையே 'குல்உ' எனப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஆ அனுமதித்துள்ள முறைப்படி அக்கணவனோடு வாழ முடியாத பெண் அவனை விட்டுப் பிரிவதில் எத்தகைய தவறுமில்லை. எனினும் வெறும் கவர்ச்சிகளுக்காக தன் கணவனை விட்டுப் பிரிந்து செல்வதற்கு ஒரு பெண் முற்படுவதனை இஸ்லாம் வெறுக்கின்றது. நபியவர்கள் இதனை பின்வருமாறு விளக்கிக் காட்டினார்கள். ''எந்த விதத் துன்பம் அனுபவிக்காத நிலையில் விவாக விடுதலை கோரும் பெண்களுக்கு சுவர்க்கத்தின் வாடை கூட ஹராமாகி விடுகின்றது'' (திர்மிதி).

ஒரு பெண் தன் கணவனிடமிருந்து விவாக விடுதலை பெற சில நியாயங்களை இஸ்லாமிய அறிஞர்கள் முன்வைக்கின்றனர். கணவன் மனைவியை விட்டு நீண்ட நாட்கள் பிரிந்திருத்தல், அவன் மனைவிக்கான தனது கடமைகளை மூன்று வருடங்களுக்கு மேல் நிறைவேற்ற முடியாதிருத்தல், விவாகம் நடைபெற்றதிலிருந்து உடலுறவு கொள்ளாதிருத்தல், தொழுநோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்டிருத்தல், கணவன் ஒழுக்கத் துறையில் மோசமாக இருப்பதுடன்

மனைவியையும் அவ்வாறனதொரு வாழ்க்கைக்கு தூண்டுதல், மனைவியை அடித்துத் துன்புறுத்தல், இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்வதற்கு தடையாக இருத்தல், அடுத்த மனைவியரோடு காட்டும் அன்பை தன்னிடம் காட்டாதிருத்தல் போன்றன இவற்றில் சில காரணங்களாகும்.

இவ்வாறான காரணங்கள் இன்றியும் குல்உ நடந்திருப்பதற்கான சான்றுகள் வரலாற்றில் காணப்படுகின்றன. ஸாபித் (ரழி) அவர்களது இரண்டு மனைவியர்களுள் அப்துல்லாஹ் பின் உபை என்ற நயவஞ்சகனின் சகோதரி ஜமீலாவும் ஒருவர். ஸாபித் (ரழி) அவர்கள் கறுப்பு நிறமுடைய குள்ளமானவர் என்பதால் அவரை விட்டு விலகிக் கொள்ள நபியவர்களிடம் அனுமதி கேட்ட போது அப்பெண்ணுக்கு வழங்கிய தோட்டத்தை மீளப்பெற்றுக் கொண்டு அவளை விட்டுவிடுமாறு நபியவர்கள் குறிப்பிட்டார்கள். எனினும் தடை வெளிப்படையாகச் சொல்ல முடியாத காரணங்களாக இருக்கலாம்.

இவ்வகை விவாகரத்தின் போது, இலங்கையில் அக்கணவனுக்கு மனைவியினால் வழங்கப்பட வேண்டிய தொகை (நஷ்டஈடு) காதி நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு வழக்குகளினதும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதன் அளவு வேறுபடும். அது கணவனால் வழங்கப்பட்ட மஹரின் அளவாகவும், சிலவேளை அதைவிட அதிகமானதாகவும் காணப்படலாம்.

**3. ஆய்வுப் பிரச்சினை**

கணவன்-மனைவி இருவருக்கும் தொடர்ந்து சமாதானமாகவும், இணக்கப்பாட்டுடனும் ஒன்றாக வாழ முடியாதென்ற நிலமையேற்படும் போது, விவாகரத்து அவசியமென இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. ஆண்-பெண் இருபாலாருக்கும் வெவ்வேறு விதிகளை ஏற்புடையதானதாக்கும் அதேவேளை விவாகரத்துப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு அடிப்படைகளை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. அத்தோடு அவ்விவாகரத்திற்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம். அவையாவன: மூன்றாம் நபர் தலையீடு, சமவயது திருமணங்கள், சீதனம், வயது வேறுபாடு, இளவயது திருமணம், அந்தஸ்து வேறுபாடு, வாழத்தெரியாமை, கல்வித்தகுதி வேறுபாடு, சொத்துப்பிரச்சினை, அழகின்மை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, கள்ளத்தொடர்பு, வசதியின்மை, ஏற்றத்தாழ்வு, உளவியல் தாக்கங்கள், சந்தேகம், உழைப்பின்மை, கணவனின் தொல்லைகள், கடன் சுமை, தாம்பத்திய உறவில் திருப்தியின்மை, பொறுப்பற்ற கணவன்,ஏமாற்றுத் திருமணங்கள், காதல் திருமணங்கள், மதமாற்றுத் திருமணங்கள், குடும்பப் புறக்கணிப்பு, விட்டுக்கொடுக்காமை, பாலியல் குறைபாடுகள், குறைபாடுள்ள பிள்ளைகள், குழந்தை பேறின்மை, தகாத நடத்தைகள், நவீன தொலை தொடர்பு சாதனங்கள், திடீரென செல்வம் கூடல், மார்க்க விளக்கமின்மை, முறையற்ற பிள்ளை வளர்ப்பு, போதைப்பொருள் பாவனை, சமூகத்தின் பங்களிப்பின்மை, ஆடம்பர மோகம், சுத்தமின்மை, பலதாரமணம், மாறிவரும் வாழ்க்கைச்சூழல், குடும்ப பிரச்சிகைளை மனம் விட்டு பேசிக்கொள்ளும் தன்மை இல்லாமை, கணவனின் பெற்றோர்களை, உறவினர்களை, நண்பர்களை அவமதித்தல், கணவனுக்கு தருவதாக வாக்களித்த சொத்துக்கள், பொருட்கள் கொடுக்காதிருத்தல் அல்லது கொடுக்காது ஏமாற்ற நினைத்தல். (வரதட்சனை, தானம்), கணவனுடைய

அனுமதியில்லாமலேயே வெளியே செல்லுதல், எதிர்பார்ப்பின் நிச்சயமற்ற தன்மை,கணவன், மனைவியின் ஆசைகளை தேவைகளை புரிந்து கொள்ளமாட்டார், கணவனும் மனைவியும் திருமணம் ஆவதற்கு முன்பு பிறந்து வளர்ந்து வாழ்ந்த சூழ்நிலைகள் வெவ்வேறாக இருக்கும். இவ்வாறான பல காரணங்கள் விவாகரத்து வழக்குகளில் பதிவாகியுள்ளன (ஸம்ஹா. எம்.எம்.எப், தாரிக். எம்.ஐ.எம்., ருமானா. எம்.டி.எப், 2017).

விவாகரத்தின் மூலம் கணவன், மனைவி அவர்களது பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தினாலும் மனைவி என்ற வகையில் அதிக பாதிப்புக்களை அவளுக்கே அது ஏற்படுத்தும். மேலும் இன்றைய காலகட்டங்களில் ஒரு பெண் கணவனினால் விவாகரத்து செய்யப்பட்டதன் பின் அவளது பிள்ளைகளும் அவளது பாதுகாப்பிலேயே வந்து விடுகின்றன. இதன் பின் கணவனினால் வழங்கப்படும் தாபரிப்புத் தொகையின் அளவு, மற்றும் தாபரிப்புத் தொகை தொடர்பான கவனயீனம் என்பன அவளையும், அவளது குழந்தைகளையும் பெரும் நிர்க்கதிக்கு ஆளாக்குகின்றன. அந்த அடிப்படையில் விவாகரத்தினால் முஸ்லிம் பெண்கள் பல உள்ளக மற்றும் வெளியக சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார். அவையாவன, பொருளாதார, குடும்ப, சமூக, தனிமனித நடத்தை மற்றும் பாலியல் சவால்களை எதிர்கொள்கின்றாள். அந்த வகையில் குற்ற உணர்வு, பதற்றமான நிலை, தனிமை உணர்வு, மகிழ்ச்சியற்ற தன்மை, மன வலி, மன உளைச்சல்களுக்கு உள்ளாதல், நம்பிக்கை இழத்தல், அனைத்துப் பொறுப்புகளையும் தனியாக சுமத்தல், கைவிடப்பட்ட அநாதரவான நிலை போன்றவற்றோடு சாதகமான பாதிப்புக்கள் எனும் போது சுதந்திர உணர்ச்சி, தனது வாழ்க்கை தொடர்பான தீர்மானங்களையும் கட்டுப்பாடுகளையும் தானே செயற்படுத்தக்கூடிய தன்மை, ஆளுமை விருத்தி என்பவையாகும்.அதே போல குடும்ப ரீதியான பாதிப்புக்களாக சுயமரியாதை இழக்கப்படல்,உறவுகள் துண்டிக்கப்படல், பிள்ளைகள் பிச்சைக்காரர்களாக மாற்றப்படல், சமூகத்தின் வன் சொல்லுக்கு ஆளாகுதல், பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல், இடைநிறுத்தப்படல்,பெண்ணினதும், குடும்பத்தினரினதும் (பிள்ளைகள்) எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படல், தகாத செயல்களில் ஈடுபடல், தந்தை பெயர் அறியாத பிள்ளைகள் உருவாகுதல், பாதுகாப்பின்மை,குழந்தைகள் தான்தோன்றித் தனமான செயல்களில் ஈடுபடல்,சமூகத்தை விட்டும் ஒதுக்கப்படல்,வறுமை போன்ற குடும்ப ரீதியான பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். மேலும் சமூக ரீதியான தாக்கங்களாக தற்கொலை அதிகரிப்பு, மனிதர்களை பழிக்குப் பழி எனும் வகையில் வன்முறைக்கு உள்ளாக்குகின்றது, விபச்சாரம் அதிகரித்தல், பாலியல் துஸ்பிரயோகம் அதிகரித்தல், ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்குதல், சமூக கௌரவம், அந்தஸ்து பாதிக்கப்படல், கலாசார சீர்கேடு, போதை வஸ்துக்களின் அதிகரிப்பு, நோய்களின் பரவலும், அதிகரிப்பும் (எயிட்ஸ், கனேரியா, சிபிலிசு, மாரடைப்பு) இவை போன்ற பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர் (ஜுல்பிகார், 1997). ஆகவே இவ்வாய்வு, இலங்கையில் அனுராதபுர மாவட்டத்தை மையப்படுத்தி விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்கள் விவாகரத்து கோருவதனால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கண்டறிவதே இதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

**4. ஆய்வின் நோக்கம்**

முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்துவரும் விவாகரத்துக்கள் பற்றிய இவ்வாய்வின் நோக்கம் பிரதானமாக இரண்டாக வரையருக்கப்பட்டுள்ளன.

1. அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களிடத்தில் விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்களை அடையாளப்படுத்தல்.
2. முஸ்லிம் பெண்கள் விவாகரத்து கோருவதனால் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிதல்.

**5. ஆய்வு முறையியல்**

அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அதில் முஸ்லிம்கள் 70,692 மக்கள் வாழ்கின்றனர். (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் - 2012).கடந்த 5 வருடங்களில் காழி நீதிமன்றங்களில் விவாகரத்துக் கோரி மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களில் 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் 848 விவாகரத்திற்கான விண்ணப்பங்கள் காழி நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்களையும், விவாகரத்துப் பெறும் முஸ்லிம் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் இவ்வாய்வு பரிசீலனைக்கு உட்படுத்துகிறது. இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வு முறையிலானதாகவும் முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகவும் அமைந்துள்ளது. அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களின் விவாகரத்துப் பிரச்சினைகளை கையாளுகின்ற காழி நீதிபதி அவர்களிடத்திலும், விவாகரத்துப் பெற்ற பெண்களில் 50 நபர்களை எழுமாறாக தெரிவுசெய்து மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் (அரைக்கட்டமைக்கப்பட்ட) இருந்தும் பெற்ற தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதேவேளை, காழி நீதிமன்றத்தில் இது சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதோடு, காழி நீதிபதியிடம் நேர்காணல் மூலம் பெற்ற தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடப்படுகின்றன.

**6. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேச முஸ்லிம்களிடத்தில் விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவை விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களின் மீது செலுத்தும் பாதிப்புக்களை பரிசீலிக்கும் நோக்கில் அது தொடர்பான தரவுகளைத் பகுப்பாய்வு செய்து தொகுத்து பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளது.

**6.0 குல்உ விவாகரத்து பெறுவதற்கான காரணங்கள**

அனுராதபுர மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களில் 2015 இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் விவாகரத்து பெற்றுள்ள நபர்களின் எண்ணிக்கையும் வீதமும் கீழ்வரும் வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றது.


வரைபடம் - 1

| ஆண்டு | தலாக் | வீதம் | குல்உ | வீதம் | மொத்தம் | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 87 | 42.2% | 119 | 57.7% | 206 | 24.2% |
| 2016 | 58 | 38.9% | 91 | 61% | 149 | 17.5% |
| 2017 | 74 | 44.3% | 93 | 55.6% | 167 | 19.6% |
| 2018 | 98 | 47.1% | 110 | 52.8% | 208 | 24.5% |
| 2019 (ஆகஸ்ட் வரை) | 51 | 43.2% | 67 | 56.7% | 118 | 13.9% |
| மொத்தம் | 368 | | 480 | | 848 | |

அனுராதபுர மாவட்டத்தில் 5 வருடங்களில் மொத்தமாக 848 நபர்களில் 368 ஆண்களும், 480 பெண்களும் விவாகரத்து பெற்றுள்ளதை வரைபடம் 1 இல் காணலாம். விவாகரத்திற்கான விண்ணப்பம் கோறுபவர்களில் அதிகமானவர்கள் பெண்களாக இருக்கின்றனர். ஆய்வில் பெற்ற தகவலின் அடிப்படையில் நோக்குவோமாயின், 2018 ஆம் ஆண்டு அதிகமான விவாகரத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதில் தலாக் கோரியவர்கள் 98 நபர்களும், குல்உ கோரியவர்கள் 110 நபர்களுமாவர். 2018 ஆம் ஆண்டுக்கு அடுத்து, குல்உ விவாகரத்தைப் பெற்ற அதிக பெண்களாக 119 நபர்கள் காணப்படுகின்றனர். இவ்வைந்து ஆண்டுகளிலும் தலாக் விவாகரத்தை விட குல்உ விவாகரத்து அதிகமாக காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்கள் மூலம் கண்டறியக்கிடைத்தது. இவ்வாய்வுப் பிரதேசத்தில் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகள் தலாக் விவாகரத்துப் பெற்ற நபர்களின் எண்ணிக்கை 87, 58, 74 மற்றும் 98 ஆகக் காணப்படுகின்றன. எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் 5 வருடங்களில் 2018 ஆம் ஆண்டு அதிகமான விவாகரத்துக்களை பெற்றுள்ளதாகவும்,2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை தலாக்கை 51 பேரும், குல்உவை 67 பேரும் பெற்றுள்ளதாக பெற்ற தரவுகளின் படி கண்டறியக்கிடைத்தது.இவ்வாறு குல்உ விவாகரதது, தலாக் விவாகரத்தை விட அதிகமாக இருப்பதற்கான காரணத்தை பின்வரும் வரைபடம் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

வரைபடம் - 2

வ




பொதுவாக விவாகரத்திற்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம். அவையாவன: மூன்றாம் நபர் தலையீடு, சமவயது திருமணங்கள், சீதனம், வயது வேறுபாடு, இளவயது திருமணம், அந்தஸ்து வேறுபாடு, வாழத்தெரியாமை, கல்வித்தகுதி வேறுபாடு, சொத்துப்பிரச்சினை, அழகின்மை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, கள்ளத்தொடர்பு, வசதியின்மை, ஏற்றத்தாழ்வு, உளவியல் தாக்கங்கள், சந்தேகம், உழைப்பின்மை, கணவனின் தொல்லைகள், கடன் சுமை, தாம்பத்திய உறவில் திருப்தியின்மை, பொறுப்பற்ற கணவன்,ஏமாற்றுத் திருமணங்கள், காதல் திருமணங்கள், மதமாற்றுத் திருமணங்கள், குடும்பப் புறக்கணிப்பு, விட்டுக்கொடுக்காமை, பாலியல் குறைபாடுகள், குறைபாடுள்ள பிள்ளைகள், குழந்தைப் பேறின்மை, தகாத நடத்தைகள், நவீன தொலை தொடர்பு சாதனங்கள், திடீரென செல்வம் கூடல், மார்க்க விளக்கமின்மை, முறையற்ற பிள்ளை வளர்ப்பு, போதைப்பொருள் பாவனை, சமூகத்தின் பங்களிப்பின்மை, ஆடம்பர மோகம், சுத்தமின்மை, பலதாரமணம், மாறிவரும் வாழ்க்கைச்சூழல், குடும்ப பிரச்சிகைளை மனம் விட்டு பேசிக்கொள்ளும் தன்மை இல்லாமை, கணவனின் பெற்றோர்களை, உறவினர்களை, நண்பர்களை அவமதித்தல், கணவனுக்கு தருவதாக வாக்களித்த சொத்துக்கள், பொருட்கள் கொடாதிருத்தல் அல்லது கொடுக்காது ஏமாற்ற நினைத்தல். (வரதட்சனை, தானம்), கணவனுடைய அனுமதியில்லாமலேயே வெளியே செல்லுதல், எதிர்பார்ப்பின் நிச்சயமற்ற தன்மை,கணவன், மனைவியின் ஆசைகள் மற்றும் தேவைகளைப் புரிந்து கொள்ளமாட்டார், கணவனும் மனைவியும் திருமணம் ஆவதற்கு முன்பு பிறந்து வளர்ந்து வாழ்ந்த சூழ்நிலைகள் வெவ்வேறாக இருக்கும். இவ்வாறான பல காரணங்கள் விவாகரத்து வழக்குகளில் பதிவாகியுள்ளன.

இந்த வகையில் அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் அதிகரித்து வரும் முஸ்லிம் பெண் விவாகரத்திற்கான பிரதான காரணமாக கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சினை அமைந்துள்ளது. இப்பிரச்சினைகள் தோன்றுவதற்கான காரணங்களை வகைப்படுத்தி நோக்கும் போது மனைவி மீது சந்தேகம் (20%), கணவனின தொடர்ச்சியான போதைப்பொருள் பாவனை (16%), மனைவியை துன்புறுத்தல் (12%), கணவன்,மனைவி மற்றும் குழந்தையை பராமரிக்காமை (22%), வேறு பெண்ணோடு தொடர்பு வைத்திருத்தல் (14%), மார்க்க விடயத்தை பின்பற்றாது பொடுபோக்காக இருத்தல் (16%) என பிரதான பகுதிக்குள் வகைபடுத்தி நோக்க முடியும். இவற்றுள் சந்தேகம் மற்றும் பராமரிக்காமை ரீதியான காரணங்களே தலையானதாக அமைகின்றுது. பராமரிப்பின்மைக்கு உட்பட்டதாக மனைவிக்கு அத்தியவசிய பொருட்களை வாங்கிக் கொடுக்காமை, பிள்ளைகளுக்கான செலவுகளை வழங்காமை, வீட்டுக்கு பொறுப்பானவராக நடக்காமை என்பவற்றை குறிப்பிடலாம். இதனால் அந்த குறிப்பிட்ட பெண் பல பாதிப்புகளுக்கு உள்ளாகின்றாள். அதனை பின்வரும் தலைப்பினூடாக கலந்துரையாடலாம்.

### 6.1 முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதனால் ஏற்படும் பாதிப்புக்கள்

அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதனால் பல பாதிப்புக்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள்

இத்தலைப்பில் கலந்துரையாடப்படுகின்றன. முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதனால், தாபரிப்புப் பணம் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை, நடத்தை ரீதியான பிரச்சினை, சுயமரியாதை இழக்கப்படல், பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படல், பாதுகாப்பு இழக்கப்படல், மன உளைச்சலுக்கு ஆளாகுதல், கலாசார, சமூக சீர்கேடுகள், தனிமனித பாதிப்புக்கள் மற்றும் அநாதரவாக்கப்படல் போன்ற பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதன் மூலம் ஆய்வின் பிரதான நோக்கம் எய்தப்பட்டுள்ளது.




வரைபடம் - 3

### 6.1.0 தாபரிப்புப் பணம் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை

ஆய்வுப் பிரதேசத்தில் எழுமாறாக நேர்காணலுக்கு உட்படுத்திய 50 பேரில் 26 நபர்கள் தாபரிப்புப் பணத்தை உரிய நேரத்தில் பெறாமல் இருக்கின்றனர். இதனால் அவர்கள் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் அவர்கள் தங்கள் தேவைகளை அதாவது உணவு, உடை, மருந்து செலவுகள் மற்றும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு தாபரிப்பு கிடைக்காத போது அவர்கள் கடன் பழுவைசுமக்க வேண்டி எற்படுகிறது. தொடர்ச்சியாக இவ்வாறு தாபரிப்புப் பெறுனர் காலதாமதத்தினால் சிறமப்படுகின்றனர். அதேவேளை, மறுபக்கம் யோசிக்கும் போது தாபரிப்புக் கோரும் வாதியின் கணவர் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ பிரிந்திரிக்கின்றனர். இதன் பிரதிபலனாக பிரதிவாதி (கணவர்) இருதோணியிற் கால் வைத்தாற் போன்று இவரின் குடும்பப் பொறுப்புக்களை சுமக்கின்றார். அத்துடன், அவரின் தொழில் நிலமை நிரந்தரமாக இருப்பதனால் மேலும் சிக்கல்கள் ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அப்பெண் தொடர்ந்தும் கணவருடன் வாழ்வதா அல்லது விவாகரத்துப் பெற்று வேறொருவருடன் வாழ்க்கை நடத்துவதா அல்லது பிள்ளைகளை தனது பெற்றோரிடமோ பாதுகாவலரிடமோ ஒப்படைத்து விட்டு வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்று உழைப்பதா என்ற கேள்வி கணைகள் அவ்வாறு உள்ளத்தில் அடுத்தடுத்து புரையோடிக்கொண்டிருக்கின்றன. இவ்வேளையில், அவள் இவற்றுக்கு உடனடி தீர்வு

காணவே விளைகிறாள். இதன் பயனாக பிள்ளைகளை பெற்றோரிடம் ஒப்படைத்து விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று பணிப்பெண்ணாக ஒரு சில பெண்கள் வேலை செய்கின்றனர். நேர்காணலில் பங்குபற்றிய ஒருவரின் பின்வரும் கூற்று மேற்படி கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

> "உரிய நேரத்தில் எனக்கு எனக்குரிய பணமோ, என்னுடைய பிள்ளைக்குரிய பணமோ கிடைப்பதில்லை. இதனால் மிகவும் கஷ்டமாக உள்ளது. வீட்டில் உணவுக்கு கஷ்டமாக உள்ளது. பிள்ளைகளின் மேலதிக வகுப்புக்குரிய பணம், வீட்டுக்கு தேவையான பொருட்கள் அத்தோடு பெருநாட்களுக்கு எனக்கு தேவையில்லை எனது பிள்ளைக்காவது ஒரு உடை வாங்கிக் கொடுத்திருக்கலாம். இறுதிவரை இதற்கு தீர்வில்லையெனில், எனது பெற்றோரிடம் குழந்தைகளை ஒப்படைத்து விட்டு வெளிநாடு செல்வதே முடிவாக இருக்கும் "

### 6.1.1 சுயகௌரவம் இழக்கப்படல்

பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் பெண்ணொருவர் வாழ்வதற்கு உரிய பாதுகாப்பு, பராமரிப்பு அவசியமாகும். அவர்கள் தனது பெற்றோரிடம் வாழும் போது அவளுக்கு அன்பும் அரவணைப்பும் கிடைத்தது. அவளது பருவ வயதை எட்டிய பின் பெற்றோர் அவளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணைவரை தேடி சிறப்பாக விவாகத்தையும் செய்து வைப்பார்கள். ஆயினும், அவளொரு புதிய சூழலுக்கு நுழைகிறாள். சிலவேளை, கணவரின் வீட்டில் வாழும் போது கணவரின் தரப்பினரால் ஏற்படும் ஒருசில கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நிலை உருவாகின்றது. இதனை அனுசரித்து நடக்க முன்வராத போது அத்தம்பதியினருக்கு இடையில் முறுகல் நிலை அல்லது முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதுவே பிரிவு நிலைக்கு ஆளாகின்றது. இதன் பின் அவள் மீண்டும் தனது பெற்றோரின் இருப்பிடத்திற்கோ அல்லது தனிகுடும்ப வாழ்க்கையையோ நடாத்திச் செல்கையில் அவளுக்கு ஏற்படும் பொருளாதார சிக்கல்களினால் ஒருசில நபர்கள் தாம் மனமுவந்து உதவிகள் ஒத்தாசைகள் வழங்குவது போன்று நடித்து அவளது வாழ்க்கையோடும் சம்பந்தப்படுகின்றனர். இதன் பின்பும் அவள் விடுபட்ட நிலையிலிருக்கும் போதும் தொடர்ச்சியான தவறுதல் எற்படும்போது உண்மையில் இந்நிலமை அவர்களுக்கும் அவளது பிள்ளைகளுக்கும் சிறந்த பராமரிப்பு கிடைக்காமையே காரணமாக இருப்பினும் சமூகம் அவளை சீர்கெட்டவள் என்றே ஒதுக்கி வைக்கிறது.இவற்றுக்கெல்லாம் வகை கூறுபவர் அவளது பதிவுத்திருமணம் செய்த கணவரே ஆகும். எனவே, அவளது சுயமரியாதை இழப்பீட்டிற்கும் கணவரே பொறுப்புதாரி ஆவார். இதனால் சமூகத்தின்பொது நிகழ்வுகளில் அவள் கழந்துகொள்ள பின்வாங்குகிறாள். அத்துடன் மார்க்க ரீதியான சட்டதிட்டங்களையும் மீறி நடந்து கொள்வதால் ஹராமான வாழ்க்கை முறைக்குள்ளும் தள்ளப்படுகிறாள். எனவே, இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கிய கணவனே பதில்சொல்லியாக வேண்டும். இவ்வாய்வின் மூலம் விவாகரத்துக் கோருவதனால் 8 பெண்கள் சுயமரியாதையை இழப்பதாக கண்டறியக்கிடைத்தது. இதனை பின்வரும் நேர்காணல் கூற்றின் மூலம் அறியலாம்.

> “எனது கணவரில் மதுபாவனையை தவிர நான் வேறேதும் குறையை காணவில்லை. இருந்த போதும் அந்த குடி பாவனை ஏனைய எல்லா விடயங்களிலும் தாக்கம் செலுத்தியது. இந்த விவாகரத்தைக் கோரியதால் நான் எனது சுய மரியாதையை இழந்தேன். பல அவமானங்களை அனுபவித்தேன். இது எனது தாய் தந்தைக்குக் கூட தெரியாது. அத்தோடு பல பாதகங்களையும் அனுபவித்து வருகிறேன். தற்போது நான் எனது தாய் தந்தையின் வீட்டில் இருக்கிறேன்”

### 6.1.2 நடத்தை ரீதியான பாதிப்புகள்

சாதாரணமாக சமூகத்திற்கு முகங்கொடுக்கும் பெண்ணை விட விவாகரத்துப் பெற்ற பெண்கள் அதிகமான சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். அந்த வகையில் அனுராதபுர மாவட்டத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்களில் 06 பெண்கள் சமூகத்திற்கு தலைகாட்ட முடியாமலும்,நல்ல விடயங்களில் கலந்து கொள்ள முடியாமலும் அசௌகரியப்படுகின்றனர். நடத்தை ரீதியான பிரச்சினையை எடுத்து நோக்கின், தகாத தொழில்நுட்ப வளர்ச்சியில் கையடக்கத் தொலைபேசி, இணையத்தளங்களின் பாவனை, சமூக வளைத்தளங்கள் என்பன தகாத உறவுகளை மென்மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. இதனால் வேறு துணைவரை தேட ஆரம்பிப்பதோடு சில ஆண்கள் அப்பெண்களின் வாழ்க்கையை விளையாட்டாக பயன்படுத்தி கை நழுவி செல்கின்றனர். உடலியல் ரீதியாக அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள, தகுதியற்ற ஆண்களோடு தொடர்புகளை வைத்துக்கொள்கின்றனர். இத்தகைய தாக்கங்களை விவாகரத்துப் பெற்ற பெண்கள் மீது வழிகோலியுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

### 6.1.3 தனிமனித பாதிப்புக்கள்

தனிமனித பாதிப்புக்கள் என்ற வகையில் உள ரீதியானவையாகவும்,அது பாதகமானதாகவும் காணப்படுகின்றன. அந்த வகையில் குற்ற உணர்வு, பதற்றமான நிலை, தனிமை உணர்வு, மகிழ்ச்சியற்ற தன்மை, மன வலி, மன உளைச்சல்களுக்கு உள்ளாதல், நம்பிக்கை இழத்தல், அனைத்துப் பொறுப்புகளையும் தனியாக சுமத்தல், கைவிடப்பட்ட அநாதரவான நிலை போன்றவற்றோடு சாதகமான பாதிப்புக்கள் எனும் போது சுதந்திர உணர்ச்சி, தனது வாழ்க்கை தொடர்பான தீர்மானங்களையும் கட்டுப்பாடுகளையும் தானே செயற்படுத்தக்கூடிய தன்மை, ஆளுமை விருத்தி என்பவையாகும்.பொதுவாக தகாத உறவுகள் குடும்பப் பிரச்சினைனையை தோற்றுவிக்கின்றன. விவாகரத்துப் பெற்ற பெண்கள் கணவனின் கரிசனை இன்றியும், தனது குடும்ப பராமரிப்பு இன்றியும் தனிமையாக வாழும் நிலைமை காணப்படுகிறது. தாய் தந்தையின் விருப்பம் இன்றி திருமணம் முடித்து பின்பு விவாகரத்தப் பெற்று குடும்பம் சீரழியும் சந்தர்ப்பங்களை நேர்காணல் மூலம் அறியக்கிடைத்தது. தனிமனித நடத்தை ரீதியான பாதிப்புக்களை 12 பெண்கள் அனுராதபுர மாவட்டதில் அனுபவிக்கின்றனர். இதனை பின்வரும் பங்குபற்றுனர் ஒருவரின் கூற்றும் இவ்விடயத்தில் அவதானிக்கத்தக்கது.

> “ஒரு பெண் தனியாக வாழ்வதற்கும் ஒரு ஆண் துணைவரோடு வாழ்வதற்கும் வித்தியாசம் காணப்படுகின்றது. எனக்கு குடும்பத்தை தனியாக கொண்டு நடத்த முடியாமல் உள்ளது. தனியே வீட்டில் இருக்கும் போது அதிகமான யோசினைகள் எனக்கு வரும்.”

### 6.1.4 பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படல்

அனுராதபுர மாவட்டத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி ஆராய்கையில், 18 பெண்களின் பிள்ளைகள் இது போன்ற பாதிப்புக்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். அப்பிள்ளைகளின் உயர் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு பாதுகாவலர் அவசியம். பாதுகாவலர் என்ற வகையில், ஒரு பிள்ளையை தாய் வளர்க்கும் விதத்தை விட தந்தை வளர்க்கும் விதம் வித்தியாசமானதாகும். தாயின் கண்டிப்பை விட தந்தையின் கண்டிப்பு அப்பிள்ளையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அளவுக்கு முக்கியமானதாகும். அது மாத்திரமின்றி பெண் பிள்ளையின் திருமணத்தின் போது வலியாக (பொறுப்புதாரர்) தந்தை அவசியமாகின்றார். அந்த சந்தர்ப்பத்தில் பல சிக்கல்களையும் அசௌகரியத்தை அனுபவிப்பதாக நேர்காணலின் மூலம் அறியக்கடைத்தது.மேலும், பொருளாதார சிக்கல்களினால் திறமை இருந்தும் கல்வியை தொடர முடியாத இக்கட்டான நிலைமை உருவாகுவதோடு, கல்வி இடைநிறுத்தப்படுவதாகவும் அறியக்கிடைத்தது. ஆண் பிள்ளையாயின் பெண் சகோதரிகளுக்கு துணையாக இருப்பார் அத்துடன் அவர்களை பராமரிக்கும் பொறுப்பையும் இவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் ஆண் பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாக்கட்டுள்ளது. மேலும் தந்தை இல்லாமையினால் பெண் பிள்ளைகள் சில தவறான நடவடிக்கைகளுக்கு செல்ல வழி ஏற்படுகிறது. பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுகிறது தொடர்பாக கூறிய நேர்காணல் கூற்றை பின்வருமாரு நோக்கலாம்.

> “ஆரம்பத்தில் உரிய மாதத்திற்கு எனது வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பிக் கொண்டிருந்தார். அவ்வாறு 5 மாதங்கள் மட்டும் கிடைத்தது. அதன் பின்பு 3 மாதமாக எனக்கு பணம் வர வில்லை. நானும் அடிக்கடி வங்கிக்குச் சென்று பார்ப்பேன். அவர் பணம் போடவில்லை. அது தொடர்பாக பேசுவதற்கு தான் தற்போது காழியாரை சந்திக்க வந்தேன். கிட்டத்தட்ட 50.000 ரூபா போன்று கிடைக்காமல் இருந்தால் தான் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு கடிதம் தருவதாக கூறினார். அதுவரை என்ன செய்வதென்று தெரியவில்லை. எனக்கு 12 வயது பெண் பிள்ளையொன்று உள்ளது. தற்போது மேலதிக வகுப்புக்களுக்கு அனுப்புவதை நிறுத்தியுள்ளேன். பாடசாலை கல்வி மாத்திரம் போதும் என்று மகளிடம் கூறினேன்.”

### 6.1.5 பாதுகாப்பு இழக்கப்படல்

விவாகரத்துப் பெற்ற பெண்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு என்பது அத்தியவசியமாகும். சில வேளைகளில்,ஆடவர்களின் தொல்லைகள் பற்றி எடுத்து கூறுவதற்கு தந்தை இல்லாவிடில் அவர்களது பாதுகாப்பு நிலை சீர்குழைய இடம் ஏற்படுகிறது. மனைவியானவள் தனியாக பயணிக்க முடியாத சூழ்நிலையும் எந்த சந்தர்ப்பங்களிலும் கணவரொருவர் இருப்பது போன்று தைரியமாக வெளியில் செல்ல முடியாது உள்ளது. துணிந்து வீட்டில் வாழ்வதும் தற்காலத்தைப் பொறுத்தவரை அச்சுறுத்தலாகவே இருக்கின்றது. அவர்களுக்கு புத்திமதி கூறி ஆலோசனை வழங்குவது

இல்லாமை பெறும் குறையாக காணப்படுகிறது.அவளது சொந்த ஆண் உறவினர்களே தவறாக நடக்க முயற்சி செய்யவும் தயங்குகிறார்களில்லை.இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் 15 பெண்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையென நேர்காணல் மூலம் அறியக்கிடைத்தது.

> ''விவாகரத்து பெறுவதற்கு முன் இருந்த தைரியம் இப்போது இல்லை. வெளியில் செல்ல பயமாக உள்ளது. எனது மகன் கொஞ்சம் பெரியவராக இருப்பின் நான் பயப்படத்தேவையில்லை''

### 6.1.6 மன உளைச்சலுக்கு ஆளாகுதல்

விவாகரத்துப் பெற்ற பெண்கள் பொது இடங்களுக்கோசமூக நிலையங்களுக்கோ அல்லது தமது பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைக்கோ செல்கையில் அவர்களுடன் பழகுபவர்கள் தமது நிலைமையைப் பற்றி ஏதும் விசாரிப்பார்களோ என்ற ஐய உணர்வுகளுடன் பழக வேண்டி ஏற்படுகிறது. இதன் மூலம் மன உளைச்சலுக்கு ஆளாகுவதுடன் இனம் புரியாத குற்ற உணர்வினை மறைக்க முற்படுவது போன்ற நிலைமைக்கு உள்ளாக வேண்டி ஏற்படும். இதை மீறி ஓரிருவராவது அவளது விவாகரத்துப் பற்றி விசாரித்தால் அதற்கு தனது குறைகளை கூறுவதா? முழுப் பழியையும் கணவர் மீது சுமத்தி தான் நியாயமானவர் என நிரூபிப்பதா? என தெரியாமல் தயங்குவார். இந்நிலையில் தான் கூடுதலாக இது பற்றிய சிந்தனை ஏற்படுகிறது. மேலும் வீட்டில் தனியாக இருக்கும் போது அது பற்றிய சிந்தனைகளும், ஏனைய தம்பதியினர்களை பார்க்கும் போது பொறாமை கொள்ளல் அல்லது தான் இது போன்று இல்லையே என வருந்துவது, மனதில் இது ஒரு பாரமாக காணப்படல் போன்ற பல மன உழைச்சல்களுக்கு ஆளாகுகின்றனர். இது போன்று அனுராதபுர மாவட்டத்தில் விவாகரத்துப் பெற்ற 13 பெண்கள் பாதிக்கப்படுவதாக நேர்காணலின் மூலம் அறியக்கிடைத்தது.

### 6.1.7 கலாசார, சமூக சீர்கேடு

விவாகரத்துப் பெறுபவர்களில் ஆண்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்களை விட பெண்கள் அதிகமான பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். ஆய்வுப்பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்களில் 20 நபர்கள் கலாசார, சமூக சீர்கேடுகளை அனுபவிப்பதாக நேர்காணலின் மூலம் அறியக்கிடைத்தது. அந்த வகையில் கலாசார சீர்கேடு என்ற வகையில், விவாகரத்துப் பெற்ற ஒருசில பெண்கள் தவறு செய்யும் போது அதனை தட்டிக் கேட்க எவரும் இல்லாததால் அவர்களுக்கு விரும்பிய முறையில் வாழ்க்கையை கொண்டுசெல்ல முயற்சி செய்கின்றனர். விரும்பிய ஆடை அமைப்புக்களையும், விரும்பிய இடங்களுக்கு தனியாக பயனிக்கவும் துணிந்து நிற்கின்றனர்.இதனால் ஏனையவர்களின் பார்வைக்கு அது தவறாக தெரிகிறது. இதன் விளைவாக இஸ்லாத்திற்கு முரணான நடவடிக்கைகளுக்கு இட்டு செல்கிறது. எதுவித பொறுப்புணர்ச்சியும் இல்லாமல் சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கின்றனர். அதுதவிர, தனது நான்கு, ஐந்து வயது குழந்தைகளையும் நவீன முறையிலான மேற்கத்தேய ஆடை முறைகளையும் கவர்ச்சிகரமான முறையில் அவர்களுக்கு அணிவிக்க முற்படுகின்றனர். மேலும் அவர்களது பிள்ளைகள் போதை வஸ்த்துக்களுக்கு அடிமையாகி சமூகத்தில் தாய் விவாகரத்துச் செய்த காரணத்திற்காகத்தான் என்ற கெட்ட பெயரையும் உருவாக்குகிறது. அத்தோடு மனிதர்களை

பழிக்குப்பழி வாங்கும் நிலைமையும், பாலியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டு விபச்சாரம் வரை கொண்டு செல்கிறது. இதனால் சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்த்து, கௌரவம் இழக்கப்பட்டு, ஆரோக்கியமற்ற ஒரு சமூகத்தையும் உருவாகிறது.

### 6.1.8 அநாதரவாக்கப்பட்ட நிலைமை

ஆய்வுப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்களிடம் நேர்காணல் மூலம் பெற்ற தகவலின் பிரகாரம், 50 பேரில் 8 பேர் மாத்திரமே தான் அநாதரவான நிலைமையை அனுபவிப்பதாக தெரிவித்தனர். எவ்வாறு இருப்பினும் விவாகரத்தின் பின்னர் தனது சொந்த குடும்பம், தனது விவாகரத்து செய்த கணவரின் குடும்பம் கைவிடப்பட்ட நிலையிலும் தான் தனிமையாகவே குழந்தைகளை பராமரிப்பதாகவும் கூறினர். எவரின் பராமரிப்பும் இன்றி தனியாகவே அவர்களது தேவைகளை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நிறைவேற்றி வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர் என்பது நேர்காணல் மூலம் அறியக்கிடைத்தது.

> “திருமணம் முடித்து ஆறு வருடங்கள் அவரோடு வாழ்க்கை நடாத்தினேன். திருமணம் முடித்ததிலிருந்தே பிரச்சினை தான். என்னால் முடியாமல் விவாகரத்தைப் பெற்றுக் கொண்டேன். இன்று வரை எனது பிள்ளைகளோடு தனிவீட்டில் இருக்கிறேன்’’

### முடிவுரை

கணவன்-மனைவி இருவருக்கும் தொடர்ந்து சமாதானமாகவும், இணக்கப்பாட்டுடனும் ஒன்றாக வாழ முடியாதென்ற நிலமையேற்படும் போது, விவாகரத்து அவசியமென இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. ஆண்-பெண் இருபாலாருக்கும் வெவ்வேறு விதிகளை ஏற்புடையதானதாக்கும் அதேவேளை விவாகரத்துப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு அடிப்படைகளை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. அந்தவகையில்,அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களிடத்தில் கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சினைகள் அதிகரித்து விவாகரத்து இடம்பெற்றுள்ளது. மனைவியை சந்தேகம் கொள்ளல், பராமரிக்காமை, போதைப்பொருள் பாவனை, துன்புறுத்தல், வேறு பெண்களோடு தொடர்பு மற்றும் மார்க்க விடயங்களில் பொடுபோக்காக இருத்தல் என்பன பெண்கள் விவாகரத்து கோர பிரதான காரணிகளாக அமைகின்றன. அப்பெண்கள் தாபரிப்புப் பணம் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை, நடத்தை ரீதியான பிரச்சினை, சுயமரியாதை இழக்கப்படல், பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படல், பாதுகாப்பு இழக்கப்படல், மன உளைச்சலுக்கு ஆளாகுதல், கலாசார, சமூக சீர்கேடுகள், தனிமனித பாதிப்புக்கள் மற்றும் அநாதரவாக்கப்படல் போன்ற பாதிப்புக்கள் என்பன சுட்டிக்காட்ட வேண்டிய முதன்மை விடயங்களாகும். ஆகவே, மேற்படி ஆய்வின் முடிவுகள் சமூக ஆய்வாளருக்கும், குடும்ப ஒருங்கிணைப்பு சங்கங்களுக்கும்,அமைப்புக்களுக்கும், பள்ளி நிர்வாகத் தலைவர்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமையும்.

## References


1. Amira El Azhary Sonbol, (1996), "Women the Family and Divorce Laws in Islamic History", Syracuse: Syracuse University.
2. Arif Ali Khan, Tauqir Mohammed Khan, (2010), "Law of Marriage and Divorce in Islam", New Delhi: Pentagon Press.
3. Jalaldeen, M.S. (2004), "The Muslim Law of Marriage Divorce & Maintains in Sri Lanka", Colombo: Peace, Education and Research Publishers.
4. சூலனி கொடிகார, ஸபானா குல்பேகம். (2009),"இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம்", கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.
5. ஜுல்பிகார், (1997),"உங்கள் மனைவியை விவாகரத்து (தலாக்) சொல்லாதீர்கள்", தஞ்சாவூர்: ஹாஜியார் புத்தக நிலையம்.
6. முஹம்மத் அக்ரம், எம்.எம். (2001),"நடைமுறைக்கேற்ற இஸ்லாம் பாகம் 2", கொழும்பு: முஸல்மன் வெளியீட்டகம்.
7. சுஹ்ரா ஷபீக், (2014),"அடிப்படை சமூகவியல் எண்ணக்கருக்கள்", அக்கரைப்பற்று: சமூக அரசியல் கல்வி வட்டம். (பக். 105-106)
8. சலீம் மர்சூப், (2008),"இலங்கையில் காதி நீதிமன்ற முறைமையும், முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்", கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.
9. றிஸ்லான்,எம்.ஜே.எம். (2009),"சமூக நிறுவனங்கள் ஓர் அறிமுகம்: சமூகவியல் நோக்கு", நிந்தவூர் NUGSSA வெளியீட்டகம்.
10. Wazeema, T., Jayathunga, N. (2017), Impact of Divorce among Muslims in Sri Lanka, "International Journal of Arts and Commerce", 6 (2).
11. ஸம்ஹா.எம்.எம்.எப், தாரிக்.எம்.ஐ.எம்., ருமானா.எம்.டி.எப். (2017), விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் - களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு," நான்காவது சர்வதேச ஆய்வரங்கு" ,இலங்கை: தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம்.
12. ஸைனுல் ஹுஸைன், எம். எப். (2003),கணவன் மனைவி பிணக்கு காரணங்களும், அணுகுமுறையும்,"இஸ்லாமிய சிந்தனை", பேருவலை: ஜாமியா நளீமிய்யா.
13. மித்ரா, (2012),விவாகவிவாகரத்துச் சட்டத்தின் குறைபாடுகளால் திசைமாறும் பெண்கள் வாழ்வு","விடிவெள்ளி", கொழும்பு.
14. பௌசுல், எம்.பி. (2015), இலங்கை முஸ்லிம் சமூகத்தினரிடையே பெருகியுள்ள விவாகரத்தும், சமூகக் கட்டமைப்பில் அதன் தாக்கங்களும்,"உண்மை உதயம்", பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யா.

15. ரசூல் இலியாஸ், (2017), முத்தலாக் தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்பு,“விடிவெள்ளி”, கொழும்பு.
16. ரவூப் ஸெய்ன், (2017), முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தத்திற்கான சில பரிந்துரைகள்,“விடிவெள்ளி”, கொழும்பு.
17. அபூமுஹை, (13.05.2005). “தலாக் ஓர் விளக்கம்-2”[online] available: http://www.islamkalvi.com/?p=407 [accessed] [12.06.2019].
18. ஆதம்பாவா, எம்.எம். (17.12.2010). “இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை”[online] available: http://www.thinakaran.lk.2010/12/17 [accessed] [15.06.2019].
19. செய்யது, அ.மு. (19.05.2017). “தலாக் குறித்து இஸ்லாம் கூறுவது என்ன? – 1”,[online] available: http://www.visai.in/2017/05/19/what-islam-says-about-talaq/ [accessed] [20.07.2019].
20. Department of Census and Statistics-Sri Lanka (2012). Statistical Abstract of the Democratic Socialist Republicof Sri Lanka. Department of Census and Statistics-Sri Lanka, Colombo, Sri Lanka. [Online] [Accessed: 20.07.2019]. http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2012Visualization/htdocs/index.php?usecase=indicator&action=DSMap&indId=10&district=Anuradhapura&Legend=3